**தலைப்பு 005 - அமைச்சரவை அலுவலகம்**

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 அபிப்பிராயம்

தலைப்பு 005 - அமைச்சரவை அலுவலகத்தின் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றுகைக் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று ஆகியவற்றை உள்ளடக்கிய 2022 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கிணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டது. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(1) உப பிரிவின் ஏற்பாடுகளுக்கமைய அமைச்சரவை அலுவலகத்தின் நிதிக்கூற்றுக்கள் மீதான எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புரைகள் உள்ளடக்கப்பட்ட பொழிப்பு அறிக்கை 2023 மே 15 ஆந் திகதி பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வெளியிடப்பட்டது. தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(2) உப பிரிவின் பிரகாரம் விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2023 மே 31 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வெளியிடப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 10 உப பிரிவின் பிரகாரம் அந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படும்.

நிதிக்கூற்றுக்களில் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான அமைச்சரவை அலுவலகத்தின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் மற்றும் காசுப்பாய்ச்சல் என்பவற்றை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியேகத்தரின் பொறுப்பு

இந்த நிதிக்கூற்றுக்களை பொதுவான ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38 ஆம் பிரிவில் குறிப்பிடப்படடுள்ள ஏற்பாடுகளுக்கமைய தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றினை தீர்மானித்தல் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் அமைச்சினால் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

தேசிய கணக்காய்வு அதிகரச்சட்டத்தின் 38(1)(இ) உப பிரிவின் பிரகாரம் அமைச்சின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளக கட்டுப்பாட்டு முறைமையினை தயாரித்து பேணிச் செல்லப்படுவதாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் சான்றுபடுத்த வேண்டியதுடன், அந்த கட்டமைப்பின் ஆக்கபூர்வமான தன்மை தொடர்பில் முன்னர் மேற்கொள்ளப்பட்ட மீளாய்வொன்றினை மேற்கொண்டு, அதற்கமைய கட்டமைப்பினை ஆக்கபூர்வமானதாக நடாத்திச் செல்வதற்கு தேவையான மாற்றங்கள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளாதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

என்னால் துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு திணைக்களத்தின் உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமானதன்மை தொடர்பாக அபிப்பராயமொன்றை தெரிவிப்பதற்கு கருத்து தெரிவிக்கவில்லை.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையாக கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்களை பொருத்தமான மற்றும் நியாயமான முறையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளமையை மதிப்பாய்வு செய்தல்.

- ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்களை சமர்ப்பிக்கும் போது நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்புகள் மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையாக கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமானதாகவும் நியாயமாகவும் உள்ளடங்கியுள்ளதாக,

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புகள், உள்ளக கட்டுப்பாட்டிலான முக்கியமான குறைபாடுகள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பில் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டது.

## 1.5 ஏனைய சட்ட தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(1)(ஈ) பிரிவின் பிரகாரம் பின்வரும் பின்வரும் விடயங்களை நான் வெளிப்படுத்துகின்றேன்.

(அ) நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் இணங்கியுள்ளதாக,

(ஆ) முன்னைய வருடத்தில் நிதிக்கூற்றுக்கள் தொடர்பில் என்னால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகள் நடைமுறைப்படுத்தப்பட்டிருந்தன என்பது.

## 2. செயற்பாட்டு மீளாய்வு

### 2.1 கட்டுநிதி முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| திறைசேரியின் கணினி அச்சீடு SA -21 மற்றும் மாதாந்த கணக்கு பொழிப்புகளின் பிரகாரம், ஏனைய மூலங்களிலிருந்தான கட்டுநிதி பெறுவனவு ரூபா 114,183 மற்றும் செலவினம் மூலம் கட்டுநிதி தீர்ப்பனவு ரூபா 159,471,086 ஆன போதிலும், ஏசீஏ-3 கட்டுநிதிக் கணக்கில் முறையே ரூபா 501,144 மற்றும் ரூபா 159,858,047 ஆன உள்ளடக்கப்பட்டிருந்தது. | எதிர்காலத்தில் சரியாக கணக்கு காட்ட தேவையான நடவடிக்கைகளை எடுக்க சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு உத்தரவிடப்பட்டுள்ளது. | திறைசேரியின் கணினி அச்சுப் பிரதிகள், மாதாந்திர கணக்குச் சுருக்கங்கள் மற்றும் நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டுள்ள கட்டுநிதிக் கணக்கு கணக்கின் மீதி ஆகியன ஒத்ததாக காணப்பட வேண்டும். |

### 2.2 செலவின முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| 2021 திசெம்பர் 21 ஆந் திகதிய 03/2021 ஆம் இலக்க பாதீட்டு சுற்றறிக்கையின் 04.1 ஆம் பந்திக்கமைய அரச நிறுவனங்களின் தொலைபேசி செலவினம் 25 சதவீதத்தினால் குறைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என கூறப்பட்டிருந்த போதிலும், நிறுவனத்தின் 1402 - தபால் மற்றும் தொலைத்தொடர்பு விடயத்தின் நிதியேற்பாட்டிலான சேமிப்பானது 6 சதவீதம் மாத்திரம் ஆகும். | அமைச்சரவை அலுவலகத்திற்க சாட்டப்பட்டுள்ள விசேடமான பணிப்பொறுப்பிற்கமைய நாளாந்த கடமைகளை நிறைவேற்றும் போது அமைச்சினாலேயே மேற்கொள்ளப்பட வேண்டிய தொடர்பாடல் செலவினத்தை குறைப்பது கடினம் | சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | |
|---|---|---|
| | ஆகும். எவ்வாறான போதிலும், இயலுமான அளவில் 6 சதவீத சேமிப்பொன்று இடம்பெற்றுள்ளது. | |

**2.3 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணக்கமின்மை**

| கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2022 திசெம்பர் 13 ஆந் திகதிய 2022/05 ஆம் இலக்க அரச கணக்குகள் திணைக்களத்தினால் வெளியிடப்பட்ட அரச கணக்குகள் வழிகாட்டியின் 06 ஆம் பந்திக்கமைய திறைசேரியின் புதிய சிகாஸ் வலை உள்ளீட்டத்தின் மூலம் உருவாக்கப்பட்ட நிதியல்லாத சொத்துக்கள் தொடர்பிலான கூற்று ஏசீஏ – 6 மாதிரியாக இணைத்து காணப்பட வேண்டிய போதிலும், நிறுவனத்தின் சிகாஸ் டெஸ்க்டொப் உள்ளீட்டத்தின் மூலம் உருவாக்கப்பட்ட நிதியல்லாத சொத்துக்கள் தொடர்பான கூற்று இணைப்பு செய்யப்பட்டிருந்தது. | எதிர்காலத்தில் அவ்வாறான தவகள் ஏற்படாதிருக்க பொறுப்புடன் செயற்படுமாறு உரிய உத்தியோகத்தருக்கு அறிவுரை வழங்கப்பட்டது. | சுற்றறிக்கையின் பிரகாரம் திறைசேரியின் புதிய சிகாஸ் வலை உள்ளீட்டத்தின் மூலம் உருவாக்கப்படாத நிதியல்லாத சொத்துக்கள் தொடர்பிலான கூற்று ஏசீஏ – 6 மாதிரியாக இணைத்து காணப்பட வேண்டும். |

**3. செயற்பாட்டு மீளாய்வு**

**3.1 சொத்துக்கள் முகாமைத்துவம்**

| கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2020 ஆகஸ்ட் 28 ஆந் திகதிய 01/2020 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் 1 ஆம் பிரிவின் 11.1 ஆம் பந்தியின் உப இலக்கம் 06 இன் பிரகாரம் மீளாய்வாண்டுக்குரிய பொருள் மெய்மையாய்வு அறிக்கைகள் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | 2022 ஆம் ஆண்டுக்கு உரியதாக பெற்றுக்கொள்ளப்பட்ட மதிப்பீட்டு அறிக்கைகளில் மற்றும் பிரதான இருப்பு பேரேட்டில் காணப்பட்ட சில இணக்கமின்மைகள் காரணமாக மீண்டும் | சுற்றறிக்கையின் பிரகாரம் உரிய திகதியில் பொருள் மெய்மையாய்வு அறிக்கைகய் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | |
|---|---|---|
| | மதிப்பீடொன்றினை மேற்கொள்வதற்காக பதவிநிலை உத்தியோகத்தர்களை கொண்ட குழுவொன்ற நியமிக்கப்பட்டதுடன், இதுவரையிலும் இறுதி அறிக்கை தயாரிக்கப்பட்டவாறு உள்ளது. கூடியளவு விரைவாக அதனை கணக்காய்வுக்கு சமமர்ப்பிக்க நடவடிக்கை எடுக்கப்படும். | |

**4. நல்லாளுகை**

**4.1 உள்ளகக் கணக்காய்வு**

| கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38 ஆம் பிரிவின் பிரகாரம் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரால் உள்ளக கணக்காய்வு பணியை உரிய முறையில் மேற்கொள்வதற்காக உரிய நடைமுறை தயாரிக்கப்பட வேண்டிய போதிலும், அவ்வாறு இடம்பெற்றிருக்கவில்லை. | இந்த அலுவலகத்திற்காக ஒதுக்கப்படும் நிதியேற்பாடு மட்டுப்படுத்தப்பட்டமை, பல்வேறு செயற்திட்டங்கள் மற்றும் நிகழ்ச்சித்திட்டங்கள் அலுவலகத்தினால் நடாத்தப்படாமை, அலுசலக நடவடிக்கைகளை உரிய முறையில் நடாத்துவதற்க நிறுவனத்தினுள் போதிய உள்ளகக் கட்டுப்பாட்டு நடைமுறைகள் தாபிக்கப்பட்டிருத்தல் மற்றும் அந்த கட்டமைப்புகள் உரிய முறையில் செயற்படுகின்றமையாலும், மேலதிக கிரயமொன்றை | அதிகாரச்சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகளுக்கமைய உள்ளகக் கணக்காய்வு பணி உரிய முறையில் மேற்கொள்வதற்கு உரிய நடைமுறை தயாரிக்கப்பட வேண்டும். |

| | | |
|---|---|---|
| | மேற்கொண்டு உள்ளகக் கணக்காய்வாளர் பததவியினை பேணும் தேவைப்பாடு காணப்படவில்லை என்பதை தெரிவித்துக்கொள்கின்றேன். | |

**5. மனிதவள முகாமைத்துவம்**

| கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) 2022 திசெம்பர் 31 ஆந் திகதிய நிறுவனத்தின் அங்கீகரிக்கப்பட்ட பதவியணி 118 மற்றும் உள்ளபடியான பதவியணி 79 ஆகும். 2021 ஆம் ஆண்டு முதல் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியில் சிரேஷ்ட மட்டத்திலான உள்ளகக் கணக்காய்வாளர், சட்ட ஆலோசகர் மற்றும் சட்ட அலுவலர் பதவிகள் வெற்றிடமாக காணப்பட்டன. | 2022.04.26 ஆந் திகதிய பாதீட்டு சுற்றறிக்கை இலக்கம் 03/2022 இன் மூலம் புதிய ஆட்சேர்ப்புகள் இடைநிறுத்தப்பட்ட காரணத்தால் உள்ளகக் கணக்காய்வாளர் பதவிக்காக ஆட்சேர்ப்பு மேற்கொள்ள எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. சட்ட ஆலோசகர் பதவிக்கு அமைச்சர்கள் குழுவின் ஒப்புதலுடன் ஓய்வு பெற்ற அதிகாரி ஒருவர் நியமிக்கப்பட்டுள்ளார். சட்ட அதிகாரி பதவிக்கு அதிகாரி ஒருவரை தேர்வு செய்வதற்காக நடத்தப்பட்ட நேர்காணல் முடிவுகளுக்கு அரசு பணியாளர் தேர்வாணையம் ஒப்புதல் அளிக்காததால், மீண்டும் விண்ணப்பம் செய்வதற்கான அங்கீகாரம் அரச சேவைகள் ஆணைக்குழுவின் | அங்கீகரிக்கப்பட்ட பதவியணி எல்லையினுள் பதவிணியை பேண நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | ஒப்புதலுக்காக சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. | |
| (ஆ) | அங்கீகரிக்கப்பட்ட பதவியணியில் 04 இரண்டாம் நிலை அபிவிருத்தி உத்தியோகத்தர் பதவிகள் இருந்த போதிலும், உண்மையான எண்ணிக்கை 06 ஆக இருந்தது. | இந்த அலுவலகத்தில் மூன்று அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் கடமையாற்றிய நிலையில், மேலும் இரண்டு அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் இந்த அலுவலகத்திற்கு நிரந்தர அடிப்படையில் ஒருங்கிணைந்த சேவைகள் பணிப்பாளர் நாயகத்தினால் நியமிக்கப்பட்டுள்ளனர். | அங்கீகரிக்கப்பட்ட எண்ணிக்கையிலான பணியாளர்கள் பராமரிக்கப்பட வேண்டும் மற்றும் நிறுவனத்தின் தேவைக்கேற்ப, PS/GT/2020 (தொகுதி III) மற்றும் பொது சேவைகள், மாகாண சபை மற்றும் உள்ளூராட்சி அமைச்சின் செயலாளரின் 2022.01.23 தேதியிட்ட கடிதத்தின்படி பதவியணியில் திருத்தங்கள் செய்யப்பட வேண்டும். |
| (இ) | அங்கீகரிக்கப்பட்ட பணிக்குழுவில் உள்ள 28 சிரேஷ்ட நிலை பணியிடங்களில் 2 பதவிகளுக்கு ஒப்பந்த அடிப்படையில் அதிகாரிகள் நியமிக்கப்பட்டு 13 பணியிடங்கள் வெற்றிடமாக உள்ளன. இது சிரேஷ்ட நிலை பதவிகளில் 42.8 சதவீதமாகவும், மூன்றாம் நிலையின் வெற்றிடங்கள் விகிதம் 20 சதவீதமாகவும், இரண்டாம் நிலையிலான வெற்றிடங்களின் அளவானது 30 சதவீதமாகவும் இருந்தது. | 2022.04.26 ஆந் தேதியிட்ட 03/2022 ஆம் இலக்கவரவு செலவுத் திட்ட சுற்றறிக்கையின் காரணமாக, வெற்றிடங்களை நிரப்புவது இடைநிறுத்தப்பட்டுள்ள தால், மேற்படி வெற்றிடங்களை நிரப்புவது தற்காலிகமாக ஒத்திவைக்கப்பட்டுள்ள து. | அத்தியாவசிய பதவிகளின் வெற்றிடங்கள் நிரப்பப்பட வேண்டும் அல்லது வட்ட முறையில் செய்யப்பட வேண்டும். |
| (ஈ) | 2018 சனவரி 24 ஆந் திகதிய 02/2018 ஆம் இலக்க பொது நிர்வாக சுற்றறிக்கையின் பின்னிணைப்பு 02 படிவத்தின் அடிப்படையில் உத்தியோகத்தர்களுக்கான மனித வள மேம்பாட்டுத் திட்டம் தயாரிக்கப்படவில்லை. | 2023 ஆம் ஆண்டுக்கான மனித வளத் திட்டம் தயாரிக்கப்பட்டு, எதிர்காலத்தில் அதற்கேற்ப செயல்படுமாறு சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது. | சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |